**சுற்றறிக்கை இலக்கம் :- 2019/01**

எனது இல : EC/ADM/EL/1/ST

தேர்தல் ஆணைக்குழு,

சரண மாவத்தை, இராஜகிரிய.

2019.08.05

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அரச சேவைகள் ஆணைக்குழுவின் மற்றும் ஏனைய நியதிச் சட்ட ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்/ மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் / பொது முகாமையாளர்கள்.

**<u>தேர்தல் அலுவல்களுக்காக அரச அலுவலர்கள் பற்றிய தகவல்களை சேகரித்தல்.</u>**

எதிர்வரும் காலங்களில் நடாத்தப்படவிருக்கும் தேர்தல்களின்போது அரச சேவையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் மத்திய அரச சேவை மற்றும் மாகாண அரச சேவையில் பணியாற்றும் அனைத்து அலுவலர்கள் தொடர்பாக மற்றும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளில் இரண்டாம் நிலையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கும் அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான கணக்கெடுப்பொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த கணக்கெடுப்புடன் தொடர்பான தரவுப் படிவங்கள் (COPEC-F1 மற்றும் COPEC-F2) மற்றும் அந்த தரவுப் படிவங்களுடன் தொடர்பான கணக்கெடுப்பு பொழிப்பு படிவம் (COPEC-F3) இந்த சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் (முறையே இணைப்பு 1,2 மற்றும் 3), இந்த படிவங்களை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.elections.gov.lk) பிரவேசித்து தரவிறக்கம் செய்துகொள்ளவும் முடியும்.

- COPEC-F1 – தலைமை வாக்கெண்ணல் அலுவலர் உட்பட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் (ஆண்) அலுவலர்களுக்கான கணக்கெடுப்புப் படிவம் [ARO/(M/F), SPO(M)]
- COPEC-F2 – தேர்தல்களின் போது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் (பெண்) கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் எழுதுநர் அலுவலர்களுக்கான கணக்கெடுப்புப் படிவம் [SPO(F)/ JPO(M/F), CL (M/F)]
- COPEC-F3 – அலுவலர் கணக்கெடுப்புப் பொழிப்பு படிவம்

**02.** மத்திய அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் பணிபுரியும் நிரந்தர பதவி வகிக்கும் அனைத்து அலுவலர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் அத்தியாவசியமாகும். வாக்கெடுப்புத் தினம் மற்றும் அதனையண்டிய சில தினங்களுக்கு அரசாங்க அலுவலகங்களின் பொதுவான அலுவல்களை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியேற்படுவதுடன், தேர்தலை வெற்றிகரமாக நடாத்துவதற்காக அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய அலுவலர்களின் எண்ணிக்கையையும் முடியுமானவரை வரையறுக்க வேண்டியுள்ளது. அவ்வாறான அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய அலுவலர்களை தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிப்பதற்குத் தேவையான அங்கீகாரம் தேர்தல் தினம் அண்மிக்கும்போது தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும்.

03. தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதனால் தமக்குரிய வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்று தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்றமை காரணமாக தமக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று நேரடியாக வாக்களிக்க முடியாத அனைத்து அரச அலுவலர்களுக்கும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு அவகாசமளிக்கின்ற எற்பாடுகள் தேர்தல்கள் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அஞ்சல் வாக்கு வசதிகளுக்காக விண்ணப்பிக்காமை அல்லது சரியான தகவல்களை சமர்ப்பிக்கத் தவறியமை அல்லது விண்ணப்பங்களைக் காலந்தாழ்த்தி சமர்ப்பித்தமை அல்லது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை போன்றவை தேர்தல் கடமைகளிலிருந்து விலக்குப் பெறுவதற்கான காரணங்கள் அல்ல என்பதை உரிய அனைத்து அலுவலர்களுக்கும் நிறுவன தலைவர்கள் கட்டாயம் அறிவித்தல் வேண்டும். குடியரசிடமிருந்து சம்பளம் பெறும் எந்தவொரு அரச அலுவலருக்கும், ஊழியருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னனுமதியின்றி தேர்தல் கடமைகளிலிருந்து விலகியிருக்க முடியாதென வலியுறுத்தப்படுகின்றது.

04. உரிய நிறுவனத் தலைவரால் தேர்தல் கடமைகளிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு குறிப்பாக பரிந்துரை செய்யப்பட்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தல் கடகைளிலிருந்து விடுவிக்கப்பட்டாலே தவிர அனைத்து அரச ஊழியர்களினதும் சேவையை தேர்தல் கடமைகளுக்குப் பெற்றுக்கொள்ள முடியுமெனக் கருதப்படுகின்றது. நிறுவனத் தலைவரின் கருத்திற்கமைய தாமதம் செய்ய முடியாத ஏதெனுமொரு அத்தியாவசிய கடமையொன்றில் ஈடுபடுத்த வேண்டியேற்படுவதனால் அல்லது அலுவலரொருவரின் தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் (கடும் சுகயீனம், கர்ப்ப காலம், பிரசவத்திற்கு பிந்திய அல்லது அவ்வாறான விஷேட நிலைமைகள்) அல்லது அலுவலரொருவரின் சேவையை தேர்தல் கடமைகளுக்காக பெற்றுக் கொடுக்க முடியாதிருப்பின், அதற்கான காரணத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் குறிப்பிட்ட நிறுவனத் தலைவரின் பரிந்துரையை தேர்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும் அரச அலுவலர்களை தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிப்பதற்கான முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதனை கவனத்தில் கொள்ளவும்.

05. கீழ்வரும் வகுதிகளுக்குரிய அலுவலர்கள் தவிர்ந்த தங்களது அலுவலகத்தில்/ பாடசாலையில் பணியாற்றும் நிரந்தரப் பதவி வகிக்கும் அனைத்து அலுவலர்கள்/ அதிபர்கள்/ ஆசிரியர்கள் அனைவரையும் ஆண்/ பெண் பேதமின்றி தேர்தல் கடமைகளிலீடுபடுத்திக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **i. அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது அதற்கு சமமான பதவிகளை வகிக்கின்ற அலுவலர்கள்**
- **ii. தேர்தல் கடமைகளுக்காக தூர பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்வதற்கு சிரமமான அல்லது தேர்தல் கடமைகளிலீடுபடுவதற்கு சிரமமான அங்கவீன நிலைமையில் உள்ள அலுவலர்கள்**
- **iii. இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதி முதல் 06 மாத காலப்பகுதியினுள் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ள அலுவலர்கள்**
- **iv. பௌத்த மத குருமார்கள் மற்றும் ஏனைய மத குருமார்கள்.**
- **v. கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் தாய்பாலூட்டும் கைக்குழந்தைகளை கொண்டுள்ள அலுவலர்கள் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு முடியாதளவு கடும் சுகயீனமுற்றுள்ள அலுவலர்கள்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளுக்குட்பட்ட அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய அலுவலர்களை தேர்தல் கடமைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக குறிப்பிட்ட நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடனான எழுத்துமூல கோரிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. ஆண், பெண் பேதமின்றி அனைத்து அலுவலர்கள்/ அதிபர்கள்/ ஆசிரியர்கள் ஊடாக இந்த படிவத்தை பூர்த்திசெய்து சமர்ப்பித்தல் நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும். அதற்கமைய

2019 ஆகஸ்ட் மாத சம்பள படிவத்தில் பெயர் உள்ளடக்கப்படும் அனைத்து அலுவலர்கள் ஊடாக அலுவலர்கள் கணக்கெடுப்புப் படிவத்தை பூரணப்படுத்தி சமர்ப்பிப்பதற்கு நிறுவனத் தலைவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்படுவதுடன் அவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட படிவங்களுடன் 2019 ஆகஸ்ட் மாத சம்பள படிவத்தில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து அலுவலர்களினதும் பெயர்ப்பட்டியலுடன் அவை சரியானவையென நிறுவனத் தலைவரால் தனிபட்ட வகையில் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்புதல் வேண்டும்.

**07.** அமைச்சு/ திணைக்களங்களில் பணிப்புரியும் அலுவலர்கள் வேறு அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தின்போது அவ்வாறான அலுவலர்கள் பற்றிய தகவல்களை அவர்கள் இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். (உ- ம் - விவசாய திணைக்களத்தின் அலுவலரொருவர் ஒரு பிரதேச அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருப்பின் அவரது படிவம் குறிப்பிட்ட பிரதேச அலுவலகத்தின் தலைவரூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**08.** அஞ்சல் திணைக்களத்தினதும் மற்றும் இலங்கை புகையிரதத் திணைக்களத்தினதும் அத்தியாவசிய சேவைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான பணியாட் குழுவினர்கள் தவிர்ந்த வாக்கெடுப்புக் கடமைகளுக்காக, எளிதில் விடுவிக்க முடியுமான அனைத்து அலுவலர்கள் ஊடாக பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் உரிய இணைப்புக் கடிதத்தோடு (Covering Letter) சமர்ப்பிக்க வேண்டியிருப்பதுடன் மாகாண மற்றும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தமது அலுவலகத்தில் பணியாற்றும் உத்தியோத்தர்கள் தொடர்பான படிவங்களுக்கு மேலதிகமாக வைத்தியசாலை பணியாட்டொகுதியின் கணக்கியல் மற்றும் முகாமைத்துவ துறைகளை சாராத அதாவது வைத்தியர்/ தாதி / துணை மருத்துவ சேவை அலுவலர்களிடயே தேர்தல் அலுவல்களுக்காக இலகுவாக விடுவிக்க முடியுமான ஏனைய அலுவலர்கள் ஊடாக குறிப்பிட்ட படிவங்களை பூரணப்படுத்தி உரிய இணைப்பு கடிதத்துடன் கீழே 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் உரிய அலுவலகங்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**09.** தலைமை வாக்கெண்ணல் அலுவலராக சேவையில் ஈடுபடுத்துவதற்கு தகைமைப்பெற்றுள்ள அலுவலர்கள் உட்பட அனைத்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் மட்டத்திலான அலுவலர்கள் மற்றும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு (ஆண்), தனித்தனியாக COPEC-F1 – படிவம் ஊடாகவும், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் (பெண்) மற்றும் கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் எழுதுநர் மட்டத்தில் சேவையிலீடுபடுவதற்கு எதிர்பார்க்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் COPEC-F2 – படிவத்தின் ஊடாகவும் குறிப்பிட்ட வகுதிகளுக்கு ஏற்புடையதாகும் பிரகாரம் தனித்தனியான தகவல்கள் பொழிப்பை COPEC-F3 – படிவத்தின் ஊடாகவும் பூரணப்படுத்துதல் வேண்டும். எனினும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு தகைமை பெற்றுள்ள அலுவலர்கள் குறைந்த எண்ணிக்கையில் (14 இலும் குறைவான) பணியாற்றும் நிறுவனங்களில் குறிப்பிட்ட வகுதிகளுக்குரிய அலுவலர்களுக்கென தனித்தனியாக COPEC-F3 – படிவத்தை பூரணப்படுத்துவதற்குப் பதிலாக ஒரு படிவத்தில் அனைத்து தகவல்களையும் உள்ளடக்குதல் போதுமானதாகும். ஆனாலும் அந்தத் தகவல்களை ARO (உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்), SPO(சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்), JPO (கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்),CL (எழுதுநர்) என தனித்தனியாக தயாரித்தல மிக முக்கியமாகும்.

**10.** அலுவலர்கள் தொடர்பான கணக்கெடுப்பு பட்டியலை சமர்ப்பிக்கும் பொறுப்பு குறிப்பிட்ட நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கப்படுவதுடன் ஒவ்வொரு அலுவலரும் சமர்ப்பிக்கும் COPEC-F1 மற்றும் COPEC-F2 படிவங்களில் இலக்கம் 1 இன் 1.1 முதல் 1.8 வரை மற்றும் இலக்கம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மையை அந்த படிவங்களை உறுதிப்படுத்தும் பதவிநிலை அலுவலர் பரீட்சித்து உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**11. தரவுப் படிவங்கள் (COPEC-F1 மற்றும் COPEC-F2) மற்றும் பூர்வாங்க கணக்கெடுப்பு பொழிப்பு படிவம் (COPEC-F3) ஆகியவற்றை அனுப்பவேண்டிய முறை**

**11.1. தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பவேண்டிய தகவல் படிவங்கள் மற்றும் கணக்கெடுப்பு ஆவணங்கள்**

(அ). கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் (அரசாங்கப் பாடசாலைகள் இப்பிரிவுக்குள் உள்ளடக்கப்படவில்லை)

(ஆ). இசுருபாய, செத்சிரிபாய, சம்பத்பாய், கொவிஜன மந்திரய, சுஹுருபாய போன்ற அலுவலக கட்டிடத் தொகுதிகளில் அமைந்துள்ள அனைத்து அரச அலுவலகங்கள்

(இ) இலங்கை பரீட்சைத் திணைக்களம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், மேல் மாகாண சபையின் அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியினுள் அமையப் பெற்றுள்ள அலுவலகங்கள் உட்பட பத்தரமுல்லை அஞ்சல் அலுவலக அதிகார எல்லையினுள் அமையப் பெற்றுள்ள அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள்.

(ஈ) மேற்படி வகைப்படுத்தலுக்கு உட்படாத இருப்பினும் கொழும்பு மாவட்டத்தினுள் அமையப் பெற்றுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள். (உ+ம் - தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு போன்ற)

போன்ற அனைத்து அலுவலகங்களிலும் பணியாற்றுகின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் வகுதிக்குட்படுகின்ற [ARO(M) மற்றும் ARO(F)] அனைத்து அலுவலர்களதும் தரவுப் படிவங்கள் மற்றும் கணக்கெடுப்பு ஆவணங்கள் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வகுதிக்குள் உட்படுகின்ற [SPO(M)] ஆண் அலுவலர்களின் தரவுப் படிவங்கள் (COPEC-F1) மற்றும் கணக்கெடுப்புப் பொழிப்பு படிவம் (COPEC-F3) ஆகியவற்றை **தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய** எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் தரவுப் படிவங்களை பூரணப்படுத்தும்போது பெயர், பதவி மற்றும் சேவை நிலையம் என்பவற்றை ஆங்கில மொழியிலும் எழுதுதல் கட்டாயமாகும்.

**11.2. கொழும்பு மாவட்ட செயலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள கொழும்பு நகர தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டிய தரவுப் படிவங்கள் மற்றும் கணக்கெடுப்புப் பொழிப்பு ஆவணங்கள்**

(அ) மேலே 11.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களின் ஏனைய அலுவலர்களின் [SPO(F), JPO/CL(M), JPO/CL (F)] தரவுப் படிவங்கள் (COPEC-F2) மற்றும் பூர்வாங்க கணக்கெடுப்பு பொழிப்பு ஆவணங்கள் (COPEC-F3)

(ஆ) மேலே 11.1 இல் குறிப்பிடப்படாத ஆனாலும் கொழும்பு மாவட்டத்தினுள் அமையப் பெற்றுள்ள ஏனைய அனைத்து அரச அலுவகங்களில் (உ-ம் - பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்களின் உப அலுவலகங்கள்) சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களதும் [ARO(M/F), SPO (M/F), JPO/CL(M), JPO/CL(F)] தரவுப் படிவங்கள் (COPEC-F1, (COPEC-F2) மற்றும் பூர்வாங்க கணக்கெடுப்பு பொழிப்பு ஆவணங்கள் (COPEC-F3)

(இ) கொழும்பு மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள அனைத்து அரச பாடசாலைகளில் பணியாற்றும் அதிபர்கள் (ஆண்/பெண்) மற்றும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் ஆகியோரின் தரவுப் படிவங்கள் (COPEC-F1, COPEC-F2) பூர்வாங்க கணக்கெடுப்பு பொழிப்பு ஆவணங்கள் (COPEC-F3)

மேலே குறிப்பிடப்பட்ட தகவல் படிவங்கள் மற்றும் பூர்வாங்க கணக்கெடுப்பு ஆவணங்களை **"பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கொழும்பு நகர தேர்தல்கள் அலுவலகம், நிலமெதுர, எல்விட்டிகல வீதி, கொழும்பு 05"** எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**11.3. ஏனைய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டிய தகவல் படிவங்கள் மற்றும் கணக்கெடுப்பு பொழிப்பு ஆவணங்கள்**

(அ) கொழும்பு தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அமையப் பெற்றுள்ள அனைத்து அரச அலுவலகங்களிலும் சேவையிலீடுபட்டுள்ள சகல அலுவலர்களதும் [(ARO/SPO(M)/ SPO(F), JPO/CL(M), JPO/CL(F)] தரவுப் படிவங்கள் (COPEC-F1, (COPEC-F2) மற்றும் பூர்வாங்க கணக்கெடுப்பு பொழிப்பு ஆவணங்கள் (COPEC-F3) என்பவற்றை குறிப்பிட்ட மாவட்டங்களின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் அறிவிக்கப்படும் பிரகாரம் குறிப்பிட்ட மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(ஆ) கொழும்பு தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அமையப் பெற்றுள்ள அனைத்து அரசாங்க பாடசாலைகளிலும் பணியாற்றுகின்ற அதிபர்கள் (ஆண்/பெண்) மற்றும் ஆசிரியர்கள்/ ஆசிரியைகளின் தரவுப் படிவங்கள் (COPEC-F1, COPEC-F2) மற்றும் பூர்வாங்க கணக்கெடுப்பு பொழிப்பு ஆவணங்கள் (COPEC-F3) என்பவற்றை குறிப்பிட்ட மாவட்டங்களின் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் அறிவிக்கப்படும் பிரகாரம் குறிப்பிட்ட மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு :- ஏதேனுமொரு அலுவலகமொன்றில் பணியாற்றும் அலுவலர்களில் அதிகமானோரின் தரவுப் படிவங்கள் மற்றும் கணக்கெடுப்பு ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் அனைத்து தரவுப் படிவங்கள் மற்றும் கணக்கெடுப்பு ஆவணங்கள் சேரும்வரை வைத்திருப்பதனை தவிர்த்தல் வேண்டும். அதுவரை தரவுப் படிவங்கள் கிடைக்கப்பெறாத அலுவலர்களின் தரவுப் படிவங்களை பின்னர் பிறிதொரு இணைப்புக் கடிதத்துடன் துரிதமாக அனுப்புவதன்கீழ் அதுவரை சேகரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை தெரிவத்தாட்சி அலுவலர்/ தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.**

12. அலுவலர்கள் தொடர்பான தகவல்களை ஆவணங்களில் உட்படுத்தும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவல் நடைமுறைக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**அலுவல் நடைமுறை**

**இங்கு அலுவலர்களை வகைப்படுத்தும்போது 2016.02.25 ஆம் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளப் படிநிலைகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன.**

12.1. **உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் :-**

* தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவதனால் தலைமை வாக்கெண்ணல் அலுவலர்களுக்கென விசேட படிவமொன்று இல்லாதிருப்பதுடன், அந்தப் பிரிவுக்குள் உள்ளடங்கும் அலுவலர்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

** சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராக ஒரு தடவையாவது அல்லது கனிட்ட தலைமை தாங்கும் அலுவலராக இரண்டு தடவைகளாவது வாக்கெடுப்பு நிலையமொன்றில் பணியாற்றாத எந்தவொரு அலுவலரும் வாக்கெடுப்பு நிலைய மேற்பார்வை உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக நியமிக்கப்பட மாட்டார்கள்.

*** சேவையின் அவசியத்தின் அடிப்படையில் எந்தவொரு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராக நியமிக்கப்படலாம்.

(I) 3/2016 ஆம் இலக்க பொ.நி. சுற்றறிக்கைக்கமைய 47,615- 10x1,335 - 8x1,630- 17 x 2,170- 110,895 சம்பள அளவுத்திட்டம் அல்லது அதனிலும் மேற்பட்ட சம்பளத் திட்டத்தை கொண்ட நாடளாவிய சமாந்தர முகாமைத்துவ சேவைகளை சேர்ந்த அலுவலர்கள்

* **நாடளாவிய சமாந்தர முகாமைத்துவ சேவைக்கு உரித்தான அல்லது அதனோடு சமாந்தரமான மூடப்பட்ட சேவைகளுக்குரிய நிறைவேற்று அலுவலர்கள் இதற்கு முன்னர் நடைபெற்ற வாக்கெடுப்புக்களின்போது வாக்கெடுப்பு நிலையக் கடமைகளில் ஈடுபட்டு, அது தொடர்பான அனுபவத்தை பெற்றிராவிடின், அத்தகைய அலுவலர்கள் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக வாக்கெடுப்பு நிலையங்களுக்கு பொறுப்பாக பணியாற்றுவரென எதிர்பார்க்கப்படுகின்றது.**

(II) ரூபா 41,580-11x755-18x1,030-68,425 மாதாந்த சம்பள அளவுத் திட்டத்தை கொண்ட மாதாந்தம் ரூபா 44,600/= அல்லது அதனிலும் அதிகமான மாதாந்த சம்பளத்தை பெறும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதியுயர் தர அலுவலர்கள் மற்றும் அதனோடு சமாந்தரமான சேவைகளின் அவ்வாறான அலுவலர்கள்.

* **முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதியுயர் தர அலுவலர்கள் மற்றும் அதனோடு சமாந்தரமான சேவைகளின் அத்தகைய அலுவலர்கள் மாதாந்தம் ரூபா 44,600/= அல்லது அதைவிடக் கூடிய மாதாந்தச் சம்பளம் பெறினும், இதற்கு முன்னர் நடைபெற்ற வாக்கெடுப்புக்களின் போது வாக்கெடுப்பு நிலையக் கடமைகளில் ஈடுபட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படவில்லையெனில் அத்தகைய அலுவலர்களை வாக்கெடுப்பு நிலையங்களின் மேற்பார்வை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமித்தல் சிரமமென தயவுடன் கவனத்தில் கொள்ளவும். எனவே அவ்வாறான அலுவலர்கள் இம்முறை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக பணியாற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.**

(III) ரூபா 34,605-10x660-11x775-15x930-63,460 அல்லது ரூபா 36,585-10x660-11x775-15x930-65,440 சம்பள அளவுத் திட்டங்களைக்கொண்ட ரூபா 50,440/- அல்லது அதனிலும் அதிகமான வெளிக்கள / அலுவலகம்சார் அலுவலர்கள் (ஆட்சேர்ப்பு தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் தேவைப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள்)

IV. அதிபர் சேவையின் முதலாம் வகுப்பு அதிபர்கள்/ பிரதி அதிபர்கள்

12.2 சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் :-

(I) மேற்குறித்த **12.1 (II)** இன் ரூபா 44,600/- இலும் குறைந்த மாதாந்த சம்பளத்தைப் பெறும் அலுவலர்கள்.

(II) அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் அதனோடு தொடர்புடைய சமாந்தர சேவைகளினதும் I ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களுக்குரிய ரூபா 36,350 - 9x560-10x660 – 47,990 மாதாந்த சம்பள அளவுத் திட்டத்தை அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்ட மாதாந்தம் ரூபா 37,470/= க்கு குறையாத சம்பளப் படிநிலையைக் கொண்டுள்ள அலுவலர்கள்.

(III) ரூபா 37,470/- இலும் அதிகமான படிகள் உள்ளடக்கப்படாத மாதாந்த சம்பளத்தைப் பெறுகின்ற இணைந்த அலுவலர்கள் மற்றும் அலுவலகம் சார் / வெளிக்கள அலுவலர்கள் (ஆட்சேர்ப்புத் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் தேவைப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள்.)

(IV) இலங்கை அதிபர் சேவையில் II ஆம் வகுப்பைச் சேர்ந்த அதிபர்கள்.

(V) இலங்கை ஆசிரியர் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள்.

குறிப்பு **(i)** **உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக வகைப்படுத்தப்படுகின்ற பதவிநிலை அலுவலர்களின் வகுதிக்குட்படாத, ஆனாலும் அவ்வகுதிக்குரிய ஆகக் குறைந்த ,மாதாந்த சம்பளத்தைப் பார்க்கிலும் கூடுதலான சம்பளம் பெறுகின்ற தொழில்நுட்ப சேவையின் I ஆம் தர அலுவலர்கள் மற்றும் அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்தை சேர்ந்த அதிபர்கள் தேர்தல்களின்போது வாக்கெடுப்பு நிலையத்துக்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமனம் செய்யப்படவுள்ளதுடன் வாக்கெண்ணலின் போது மேற்பார்வை மட்டத்திலான பதவியொன்றான பெரிய பெட்டிக்கு வாக்குச் சீட்டுக்களை மாற்றுகின்ற அலுவலர்களாக (Transfer Officer) நியமனம் செய்யப்படவுள்ளனர்.**

குறிப்பு **(ii)** **37,470/= ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த சம்பளத்தைப் பெற்றுக் கொள்கின்ற போதிலும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய வினைத்திறனை மற்றும் ஆற்றல் உறுதிப்படுத்தப்படாத வேறு துறைகளில் திறமைகளைக்கொண்ட அலுவலர்களை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக வகைப்படுத்தாமல் அவர்கள் ஊடாக கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்குரிய படிவங்களை நிரப்பிக் கொள்ளுதல் வேண்டும்.**

குறிப்பு **(iii)** **மேலேயுள்ள II இல் குறிப்பிடப்பட்டுள்ள சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான சம்பளப் படிநிலையிலும் (மாதாந்த சம்பளம் ரூபா. 37,470/=) குறைவான சம்பளத்தைப் பெறுகின்ற போதிலும், இதற்கு முன்னர் தேர்தல்களின் போது வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக கடமையாற்றியுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் வகுப்பு (அல்லது அதற்குச் சமமான சேவைகளின் 1 ஆம் வகுப்பு) அலுவலர்கள் மற்றும் மூடப்பட்ட சேவைகளில் அத்தகைய பதவிகளை வகிக்கின்ற மாதாந்தம் (படிகளடங்காத) 36,350/= ரூபாவிலும் அதிகமான சம்பளத்தைப் பெறுகின்ற அலுவலர்கள் சேவைக்கான அவசியத்திற்கமைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமிக்கப்படல் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படும்.**

குறிப்பு **(iv)** **ஆட்சேர்ப்புத் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் தேவைப்படுகின்ற இணைந்த அலுவலர்கள் மற்றும் அலுவலகம் சார் / வெளிக்கள**

அலுவலர் பதவி வகிக்கின்ற அலுவலர்கள் மேற்குறிப்பிடப்பட்ட 37,470/= இற்குக் குறைவான ஆனாலும் 35,050/= அல்லது அதனிலும் அதிகமான படிகளடங்காத மாதாந்த சம்பளத்தைப் பெறுபவர்களாயின் மற்றும் அந்த அலுவலர்கள் இதற்கு முந்திய தேர்தல்களின்போது ஒரு தடவையாவது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராக அல்லது மூன்று தடவைகள் கனிட்ட தலைமை தாங்கும் அலுவலராக வாக்கெடுப்பு நிலையக் கடமைகளின் ஈடுபட்டிருப்பின், அவ்வாறான அலுவலர்களைத் சேவையின் அவசியத்திற்கமைய வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமனம் செய்தல் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படும்.

குறிப்பு (v) இதற்கு முன்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் / கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் / எழுதுநர் பதவியொன்றில் அல்லது வாக்கெண்ணல் கடமையில் ஈடுபட்டிராத மேலே 12.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள (I) மற்றும் (V) வகுதிகளுக்குரிய அலுவலர்களை கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**12.3 கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் :-**

(I) மேற்குறித்த 12.2 இன் குறிப்பு **(ii)** இற்கமைய கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக வகைப்படுத்தப்பட்ட அலுவலர்கள்,

(II) மேலே 12.2 II இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 36,350 - 9x560 -10x660 – 47,990/- அல்லது அவ்வாறான சம்பள அளவுத் திட்டத்தினைக்கொண்ட ஆனாலும் ,சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமனம் செய்யப்படுவதற்கான உரிய அனுபவத்தைக் கொண்டிராத அலுவலர்கள் மற்றும்

(III) மாதாந்தம் ரூ. 37,470/- இற்குக் குறைவானதும் ரூ. 35,050/= அல்லது அதனிலும் அதிகமான சம்பளத்தை பெறுகின்ற ஆனாலும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமனம் செய்யப்படுவதற்குரிய அனுபவத்தைக் கொண்டிராத இணைந்த மற்றும் அலுவலகம்சார் / வெளிக்கள அலுவலர்கள் மற்றும் மாதாந்தம் 35,050/- இற்குக் குறைவான சம்பளத்தைப் பெறுகின்ற இணைந்த அலுவலர்கள்,

(IV) ரூபா 32,290 - 18 x 350 – 38,590 எனும் மாதாந்த சம்பள அளவுத் திட்டத்தை அல்லது அதனிலும் கூடிய சம்பள அளவுத் திட்டத்தைக்கொண்ட மாதாந்தம் படிகளடங்காத ரூபா 32,290/- அல்லது அதனிலும் அதிகமான சம்பளத்தைப் பெறுகின்ற அலுவலர்கள்,

(V) இலங்கை அதிபர் சேவையின் III ஆம் ஆம் வகுப்பைச் சேர்ந்த அதிபர்கள்.

(VI) இலங்கை ஆசிரியர் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள்.

குறிப்பு (I) மேலே 12.3 (V) இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிபர்கள் இதற்கு முன்னர் வாக்கெடுப்புக் கடமைகளில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக இதற்கு முந்திய தேர்தல்களின்போது ஒரு தடவையாவது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராக அல்லது இரண்டு தடவைகள் கனிட்ட தலைமை தாங்கும் அலுவலராக வாக்கெடுப்பு நிலையக் கடமைகளின் ஈடுபட்டிருப்பின், அவ்வாறான அலுவலர்களைத் சேவையின் அவசியத்திற்கமைய வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமனம் செய்தல் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படும்.

குறிப்பு (II) தனது ஆற்றல் மற்றும் பயிற்சிக்கமைய கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவருக்கு இருக்க வேண்டிய வினைத்திறன் உறுதிப்படுத்தப்படாத வேறு துறைகளுடன் தொடர்புடைய அலுவலர்கள் மூலம் வாக்கெடுப்பு நிலைய எழுதுநர்களுக்கான படிவங்களை நிரப்பி சமர்ப்பித்தல் வேண்டும்.

### 12.4 எழுதுநர்கள்

(I) மேற்குறித்த 12.3 இன் குறிப்பு (II) இன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிக்குரிய அலுவலர்கள் மற்றும்,

(II) ரூபா 28,940-18x300-34,340 எனும் மாதாந்த சம்பளத் திட்டத்தை அல்லது அதனிலும் அதிகமான சம்பள அளவுத் திட்டத்தைக்கொண்ட மாதாந்தம் ரூபா 28,940/- அல்லது அதனிலும் அதிக சம்பளத்தைப் பெறும் அலுவலர்கள்,

(III) இலங்கை ஆசிரியர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரம் மற்றும் 3 ஆம் வகுப்பின் I ஆம் தரம் (A,B,C) மற்றும் II ஆம் தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் பயிலுநர் ஆசிரியர்கள்.

குறிப்பு :- மேலே 12.4 (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்திலும் குறைந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய (2016.02.25 ஆம் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN – 1/2016 சம்பள முறைமை) தகுதிகாண் காலத்தைக் கடந்துள்ள அரச அலுவலர்களை சேவைக்கான தேவைப்பாடு ஏற்படுமாயின் மாத்திரம் வாக்கெடுப்பு நிலைய எழுதுநர்களாக சேவையில் ஈடுபடுத்திக்கொள்ள முடியுமாக இருப்பதனால் அத்தகைய அலுவலர்களும் தகவல் படிவங்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

12.5 இலங்கை ஆசிரியர் சேவைக்குரித்தான சம்பள அளவுத் திட்டங்களுக்கு சமாந்தரமான (இணையான) சம்பள அளவுத் திட்டங்களுக்குரிய சம்பளத்தைப் பெறும் நியமனம் உறுதி செய்யப்பட்டுள்ள துறவர வாழ்க்கை வாழாத பிரிவெணா ஆசிரியர்களுக்கும் உரிய பிரகாரம் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கான கோரிக்கைகளை சமர்ப்பிக்க முடியும்.

12.6 எவ்வாறாயினும் தேர்தல் ஆணைக்குழுவினால் அலுவலர்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தும்போது அந்தந்த மாவட்டங்களின் அலுவலர்களுக்கான தேவைக்கமைய மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறைக்குப் புறம்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாக கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

## 13. பொதுவான விடயங்கள் :-

**13.1** அலுவலர் ஒருவரின் சம்பளம் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும்போது அவருக்கு செலுத்தப்படும் ஏனைய படிகளைக் கவனத்திற்கொள்ளக் கூடாது. 2016.02.25 ஆம் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளப் படிநிலையை அடிப்படையாகக்கொள்ளல் வேண்டும்.

**13.2** COPEC – F3 கணக்கெடுப்பு பொழிப்பு படிவங்களை சமர்ப்பிக்கின்றபோது அலுவலர்களின் மிகக்கிட்டிய சேவை மூப்பு வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் பெயர்கள் குறிப்பிடப்படல் வேண்டும். நிறுவனங்கள் அல்லது பாடசாலைகளுக்கான குறியீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்தப் படிவங்களில் குறிப்பிட்ட இடத்தில் அக்குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

**13.3** குறிப்பிட்ட பிரதேச செயலகப் பிரிவினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காக தெரிவத்தாட்சி அலுவலருக்கோ, பொலிசாருக்கோ ஒத்துழைப்பு வழங்க வேண்டியேற்படின் அவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள் தத்தமது பிரிவுக்குள் தரித்திருக்க வேண்டியிருப்பதனால் அவர்களின் பெயர்களை வாக்கெடுப்புப் பணிக்குழுவில் உள்ளடக்கத் தேவையில்லை.

13.4 தமது பதவிவழி அந்தஸ்து காரணமாக வாக்கெடுப்புக் கடமைகளுக்காக நியமனஞ் செய்யப்படுவதற்குப் தகைமையற்ற நீதிமன்ற அலுவலர்கள், பொலிஸ் சேவையில் சீருடையுடன் பணியாற்றுபவர்கள் அல்லது கிராம அலுவலர்கள் ஆகியோர் இப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதில்லை.

13.5 ஆரம்ப மட்டத்திற்குரிய கனிட்ட ஊழியர்களிடமிருந்து இந்த COPEC-F1, COPEC-F2 மற்றும் COPEC-F3 படிவங்கள் நிரப்பப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆயினும் வாக்கெடுப்பின் பூர்வாங்கப் பணிகளுக்கு அவ்வூழியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தருமாறு தெரிவத்தாட்சி அலுவலர்கள் கோருகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேவையான அலுவல்களை மேற்கொள்ளுமாறு நிறுவனத் தலைவர்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**14. உரிய மாவட்டங்களின் நிறுவனத் தலைவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற ஏனைய உதவிகள் -**

பணியாட் தொகுதியினர் மற்றும் வாகனங்களை வழங்குவதற்கு மேலதிகமாக இத்தேர்தலோடு தொடர்புடைய வெவ்வேறு விடயங்களின்போது தேர்தல் ஆணைக்குழுவிற்கு மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலுள்ள நிறுவனத் தலைவர்களின் உதவி தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்கள் எழக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உங்களது பூரண ஒத்துழைப்பை தேர்தல் அலுவல்களுக்காகப் பெற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், உங்களது நிறுவனத்தின் அனைத்து அலுவலர்களினதும் ஒத்துழைப்பை வழங்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

**15.** இச்சுற்றறிக்கை தொடர்பாக உங்கள் அமைச்சின்/ திணைக்களத்தின் பணியாட்டொகுதி அங்கத்தவர்களை மற்றும் அமைச்சின்/ திணைக்களத்தின் கீழுள்ள மாவட்ட/ பிரதேச மற்றும் உப அலுவலகங்களின் தலைவர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**16.** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ 104(ஊ) (1), (2) 104எ மற்றும் 104எஎ உறுப்புரைகள் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய தேர்தல் ஆணைக்குழுவினால் இந்த இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

**மஹிந்த தேசப்பிரிய,**
**தவிசாளர்,**
**தேர்தல் ஆணைக்குழு**

குறிப்பு :-

(i) இந்தச் சுற்றறிக்கையின் பிரதிகள் சனாதிபதியின் செயலாளர், பிரதம அமைச்சரின் செயலாளர் மற்றும் அமைச்சரவையின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு அனுப்பப்படுகின்றது.

(ii) இந்தச் சுற்றறிக்கை தொடர்பான மேலதிக தகவல்களை தேர்தல்கள் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்வதன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். (011 - 2868441-2-3)